**தலைப்பு 286 – காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று, வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.2.2 ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட வருமான குறியீட்டிற்குரிய வருமானக் கணக்கு என்பன காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 286 – காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 26 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களித்தன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | (i) | கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை | 2.1.1 |
| | | (ii) | பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2 |
| | | (iii) | மிகை நிதி ஏற்பாடு | 2.6 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்கான ஒழுங்கமைப்பு வெற்றியளித்துள்ளது என்பதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை சரியாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவற்றை முறைப்படியாகவும் முழுமையாகவும் தாமதமின்றியும் சேகரித்துக்கொள்வதற்கும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பணத்தை கணக்கீடு செய்வதற்கும் அரசாங்கத்திற்கான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்வதற்கு அதிகாரம் வழங்குவதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதனை மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கும் அவை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்து அதற்காக தாமதமின்றியும் சரியாகவும் கொடுப்பனவு செய்வதற்கு ஒழுங்குவிதிகள் வழங்குதல். | முகாமைத்துவ பலவீனங்கள் | 2.5 |
| 128(1) (இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும். | காலாவதியான வைப்புக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்காமை | 2.9 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக | சொத்துக்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| | வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வு செய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கி உள்ளன எனவும், | | |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்தல் | 2.8 |
| 128(1)(ஒ) | மேற்கொள்ளப்பட்ட ஏதாவதொரு செலவு அல்லது பொறுப்புக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தும் தமது செலவு விடய நோக்கெல்லை அல்லது வரம்புகள் அல்லது ஏனைய அதிகாரம் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டிற்குள் அமைந்துள்ளது எனவும் அது போதியளவு அதிகாரத்திற்கு உட்பட்டுள்ளன எனவும் | நிதி ஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்தல் | 2.4 |
| 127(1)கூ | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் | சொத்துக்களிலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமை | 2.3(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் அந் நட்டங்கள் தொட்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதனை கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாகும். | | |
| 128(2) (உ) | அரச வருமானங்கள் சேகரிப்பது தொடர்பாக செயற்படும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடனும் அவற்றை திணைக்களங்களுடனும் விசாரித்து அரசிற்கு வருமதியாக உள்ள நிலுவையாகவுள்ள அரசிறையை விரைவில் சேகரிப்பதன் பொருட்டு விசேட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன என்பதையும் | நிலுவை வருமானங்களை சேகரித்ததன் பின்னர் பின்தொடர் நடவடிக்கை பலவீனமடைதல் | 2.7 |

## 2. பொருன்மையான மற்றும் முக்கயத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

**(அ) எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளாமை**

பின்வரும் அவதாணிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொடக்க செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் 600,000 காணித்துண்டுகளை அரசாங்க காணிகள் தொடர்பான தரவு முறைமைக்குள் உள்ளடக்குவதற்காக திட்டமிடப்பட்டிருந்தும் அந்த இலக்கு 2017 ஒக்டோபர் 03 ஆந் திகதி 300,000 காணித்துண்டுகளாக திருத்தப்பட்டிருந்தும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 19,957,603 செலவு செய்து 498,622 காணித்துண்டுகள் தரவு முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 41,157,461 கிரயம் மேற்கொண்டு 231,021 காணித்துண்டுகள் மாத்திரம் தரவு முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவுகள் 106 சதவீதத்தால் அதிகரித்திருந்தும் தரவுகளை உள்ளடக்கும் சதவீதம் 54 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ii) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 23,419,393 நிலுவை வருமானத்தில் 75 சதவீதத்தை அறவீடு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்ததும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,696,638 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது நிலுவை வருமானத்தில் 20 சதவீதமாக இருந்தது.

(iii) அரசாங்க காணிகளை குத்தகைக்கு வழங்கும் நடைமுறைகளுக்குரிய குத்தகை செலுத்தாதவர்கள் சம்பந்தமாக 05 வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தும் பிணை வழங்காமையின் காரணமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் போது உரிய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட்ட தரவுகளை இனங்காண்பதற்கும் அடைய வேண்டிய இடத்தை தீர்மானிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

### 2.2.1 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) இரத்மலானை கணனி ஆய்வுகூடம் மற்றும் கேட்போர் கூடத்திற்கான தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் கணனி ஆய்வுகூடத்துடனான பூங்கா சுற்றாடலை அலங்காரப்படுத்துவதற்காக ரூபா 8.83 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.2 வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி கோரலினை அழைத்ததற்கான பரிகாரமாக கேள்விதாரருக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் கேள்வி கோரும் ஆவணங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் ஒவ்வொரு பெறுகைகளுக்கு சமமாகும் வகையில் விபரமான தகவல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. வழிகாட்டிக் கோவையின் 4.3.1 வழிகாட்டியின் பிரகாரம் பூங்காவை அலங்காரப்படுத்தும் நடவடிக்கைக்கான மொத்த கிரய மதிப்பீடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உறுதி மேல் உறைகளை அச்சிடுதலை அவசரத் தேவையாகக் காட்டி அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2 வழிகாட்டியை பின்பற்றாது 19,000 உறுதி உறையை அச்சிடுவதற்காக 2017 ஆம் ஆண்டில் 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 557,050 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மொனராகலை சுற்றுலா விடுதியை திருத்தம் செய்வதற்காக ரூபா 1,264,188 ஆகக் குறைந்த விலையைச் சமர்ப்பித்த ஒப்பந்தக்காரருடன் 2016 மே 12 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தும் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக் குழுவின் சிபாரிசு மற்றும் தீர்மானம் இன்றி உரிய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி திறத்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) சொத்துக்களை ஏடுகளில் பதிதல்

2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 291,097 பெறுமதியான சொத்துக்கள் மதிப்பீட்டு அறிக்கைகளில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கொம்ப்ட்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) சொத்துக்களிலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமை

அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் 91 ஆம் பிரிவு மற்றும் 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்பீ/02/10 ஆம் இலக்க அரசாங்க காணிகள் முகாமைத்துவம் தொடர்பான சனாதிபதி அலுவலக சுற்றிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் காணிகளை நிர்வகித்தல் மற்றும் காணி நிர்வாகம் சம்பந்தமாக உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்யும் முழுமையான அதிகாரம் காணி ஆணையாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குத்தகைப் பணத்தை ஒழுங்காக அறவீடு செய்யும் உரிய நடைமுறை இருக்கவில்லை. எனவே திணைக்களத்தால் அரசாங்க காணிகளை அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வதிவிடம், விவசாயம், வணிகம் ஆகிய நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கி காணி ஆணையாளர் நாயகம் மற்றும் மாகாண காணி ஆணையாளர் சேகரித்த வருமானத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 510.86 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டது.

### (இ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

திணைக்களத்திற்குச் சொந்தமான 05 வாகனங்கள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகவும் இன்னும் 02 வாகனங்கள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

### (ஈ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

திணைக்களத்தால் ரூபா 7.50 மில்லியன் கிரயமான மோட்டார் வாகனம் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தன.

### (உ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல்

நில அளவையாளர்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 7.12 மில்லியன் கிரயமான ஒரு வாகனம் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும், காணிகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 11.40 மில்லியன் கிரயமான 02 வாகனங்கள் 09 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 48.54 மில்லியன் கிரயமான 07 வாகனங்கள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த வாகனங்களை சட்டரீதியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2017 யூன் 28 ஆந் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 04 மற்றும் 05 ஆம் பந்திகளின் பிரகாரம் அனைத்து சொத்துக்கள் தொடர்பாக சரியான தகவல்கள் கொம்ட்ரோலர் ஜெனராலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 550,875 தொகையான நிலையான சொத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2013 யூலை 12 ஆந் திகதிய SA/AS/AA/Circular ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க சொத்துக்களை ஏடுகளில் பதிவு செய்வதற்காக காணிகளையும் கட்டிடங்களையும் மதிப்பீடு செய்தலை 2013 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்களை கொம்பட்ரோலர் ஜெனராலுக்கு அறிக்கையிடுவதற்கு முடியாதிருந்தது.

## 2.4 கட்டுப்பாடுகளும் பொறுப்புக்களும்

இது சம்பந்தமாக பின்வரும் அவதாணிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டை மிகைத்து பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யக்கூடாது என்ற போதிலும் திணைக்களத்தால் 4 செலவு விடயங்களுக்காக நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 1,251,714 மொத்த தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத செலவு விடயங்களுக்காக ரூபா 521,407 தொகையான பொறுப்புக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 2.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணி தகவல் முகாமைத்துவ முறைமைக்குரிய பயிற்றுவித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் குறிக்கோளுடன் 2016 ஆம் ஆண்டின் போது ஒரு கட்டிடத்தை நிர்மாணித்து தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 17.96 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததும் மின்சார முறைமையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக 2017 திசெம்பர் வரையும் பயன்படுத்தாது காணப்பட்டது. எவ்வாறாயினும் கட்டிடத்தின் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகளுக்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 5.44 மில்லியன் கிரயம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டுகளின் போது உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் ந்வடிக்கைகளுக்காக மிலோதா நிதி நிறுவனத்திற்கு ரூபா 3.96 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிர்ணய உரிமை திணைக்களத்திற்குச் சொந்தமில்லாத ஒரு காணியில் காணி ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 36.40 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் 2016 சனவரி 12 ஆந் திகதி கட்டிடத் திணைக்களம் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டிருந்ததுடன் உத்தியோகப்பூர்வ இல்லத்தை நிர்மாணித்ததன் பின்னர் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) நீண்ட கால குத்தகைக்கு வழங்கும் நடைமுறையில் நீண்ட கால குத்தகை உறுதிக்காக மாகாண காணி ஆணையாளரின் அல்லது பிரதி காணி ஆணையாளரின் சிபாரிசுடன் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுதல் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக 01 ஆண்டிலிருந்து 08 ஆண்டுகள் வரையான காலம் எடுத்த 05 சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) குத்தகை உறுதியை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுதல்களில் காணப்பட்ட குறைபாடுகளை தெரிவிப்பதற்காக 6 மாதங்களிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலம் எடுத்திருந்த 08 சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(உ) அமைச்சரின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நீண்டகால குத்தகை கோவைகளில் பெரும்பாலும் குறைபாடுகள் காணப்பட்டதன் காரணமாக திருப்பி அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. நீண்டகால குத்தகை உறுதிகளை சனாதிபதி அவர்களின் கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கும் போதும் குறைபாடுகளுடன் சமர்ப்பித்த 03 சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 2.6 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்துள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல் மற்றும் அது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 206.13 | 203.03 | 3.10 | 1.50 |
| | மூலதனம் | 51.60 | 50.01 | 1.59 | 3.08 |
| | மொத்தம் | 257.73 | 253.04 | 4.69 | 1.82 |
| **2014** | மீண்டுவருபவை | 248.60 | 245.01 | 3.59 | 1.44 |
| | மூலதனம் | 89.10 | 87.12 | 1.98 | 2.22 |
| | மொத்தம் | 337.70 | 332.13 | 5.57 | 1.65 |
| **2015** | மீண்டுவருபவை | 314.03 | 312.64 | 1.39 | 0.44 |
| | மூலதனம் | 80.05 | 79.05 | 1.00 | 1.25 |
| | மொத்தம் | 394.08 | 391.69 | 2.39 | 0.61 |
| **2016** | மீண்டுவருபவை | 341.46 | 339.57 | 1.89 | 0.55 |
| | மூலதனம் | 75.36 | 72.66 | 2.70 | 3.58 |
| | மொத்தம் | 416.82 | 412.23 | 4.59 | 1.10 |
| **2017** | மீண்டுவருபவை | 350.76 | 342.17 | 8.59 | 2.45 |
| | மூலதனம் | 54.20 | 34.15 | 20.05 | 36.99 |
| | மொத்தம் | 404.96 | 376.32 | 28.64 | 7.07 |

மீளாய்வாண்டின் போது 04 செலவு விடயங்களுக்காக ரூபா 38.70 மில்லியன் மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 21.87 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பு ரூபா 16.83 மில்லியன் ஆக இருந்ததனால் வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்பு 27 சதவீதத்திலிருந்து 47 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

## 2.7 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டிற்காக 20.02.01.03 ஆம் வருமான குறியீட்டிற்காக ரூபா 60 மில்லியன் மொத்த தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வடிண்டின் போது ரூபா 70.13 மில்லியன் மொத்த தொகையான வருமானம் சேகரிப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 116.88 சதவீதமாக இருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணம் 142 இன் பிரகாரம் வருமானத்தை முன்னறிதல் மற்றும் மதிப்பீட்டினைத் தயாரித்தல் இடப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பித்த வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 30.20 மில்லியன் மொத்த வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த வருமானம் 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வீச்சுக்குரியதாகும். நிலுவையாக இருந்த வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(இ) நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்குரிய பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டதன் காரணமாக முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 06 பிரதி காணி ஆணையாளர் அலுவலகங்களுக்குரிய ரூபா 10.54 மில்லியன் மொதத்த தொகையான நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அறவிடப்படாதிருந்தது.

(ஈ) 04 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய நிலுவை வருமானத்திற்கும் வருமானக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட வருமானத்திற்குமிடையே ரூபா 2.20 மில்லியன் மொத்த தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டதனால் அந்த வேறுபாடு சம்பந்தமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 28601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 21.00 | 20.35 | 15.20 | 16.36 | 80.00 | 55.45 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பித்த இணக்க கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 934,016 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகள் 01 ஆண்டிலிருந்து 20 ஆண்டுகள் வரையான கால வீச்சில் காணப்பட்டு இருந்தும் அந்த நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

**(ஆ) அமைச்சு திணைக்களம் மாகாண சபைகள் என்பவற்றிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதிகள்**

அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 105,163 கடன் மீதி 26 ஆண்டுகளிலிருந்து 29 ஆண்டுகள் வரையான கால வீச்சிலும் மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 26 ஆண்டுகளை மிகைத்த ரூபா 77,360 மீதியையும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**(இ) பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 118 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை**

2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 3.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபைக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை மாகாண சபைகளிடமிருந்து ஒரே தடவையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். 3.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறு செய்ய முடியாதிருந்தால் உரிய மாகாண சபைகளிடமிருந்து மாதாாந்தம் கடன் தவணைப் பணத்தையும் வட்டியையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் 03 மாகாண சபைகளிடமிருந்து அறவிட வேண்டிய 07 ஆண்டுகளை மிகைத்த ரூபா 210,367 மொத்த தொகையான கடன் மீதிகள் சம்பந்தமாக சுற்றறிக்கையின் பிரகாரம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.9 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் ரூபா 70.86 மில்லியன் கூட்டு மொத்தமாகும். அவற்றில் காணப்பட்ட 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 66.57 கூட்டு மொத்தமான 31 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் ஆளணி ஊதிப தொகுதிக்காக ரூபா 276.21 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 490,610 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 53 | 43 | 10 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 38 | 10 | 28 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 674 | 399 | 275 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 140 | 111 | 29 |
| | **மொத்தம்** | **905** | **563** | **342** |